**DEPARTMENT OF CHILDREN WELFARE AND SPECIAL SERVICES**

**Press Release**

**Appointment of Social Worker Members for the Juvenile Justice Board.**

Applications are invited by the Director of Children Welfare and Special Services from the eligible candidates who possesses the following qualifications for appointment of Social Worker Member of the Juvenile Justice Board, Tirunelveli District under the provisions of Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015. Social Worker Member for Juvenile Justice Board will be appointed by Government on a honorarium basis of which one shall be a woman and the position is not a Government employment.

The applicants should have been actively involved in health, education or welfare activities pertaining to children for atleast seven years or a practicing professional with a degree in child psychology, psychiatry, sociology or law. The age of the applicant should not be less than 35 years of age and not completed 65 years on the date of notification.

The application format and eligibility criteria may be obtained from the District Child Protection Unit, District Collectorate, Kokirakulam, Tirunelveli District or applicant can visit departmental website https://dsdcpimms.tn.gov.in. & District Website https://tirunelveli.nic.in/ Filled in applications should be sent to the following address on or before **05.00 P.M. 15.09.2025 (Monday)**

The Director,
Directorate of Children Welfare and Special Services,
No. 300, Purasaiwalkam High Road, Kellys
Chennai – 600 010.

The filled in applications should reach the above office within stipulated date. The appointment will be purely based on merit and experience. The decision of the Government will be final in this regard.

District Collector,
Tirunelveli.

**குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை**

**பத்திரிக்கை வெளியீடு**

**இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூகப்பணி உறுப்பினர்கள் நியமனம்**

2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிமுறைகளின்படி திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இளைஞர் நீதி குழுமத்திற்கு சமூகப்பணி உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இளைஞர் நீதி குழுமத்திற்கு ஒரு பெண் உட்பட இரண்டு சமூகப்பணி உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர் மற்றும் இப்பதவி அரசு பணி அல்ல.

விண்ணப்பதாரர் குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணியில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(அல்லது)

குழந்தை உளவியல், மனநல மருத்துவம், சமூகவியல் அல்லது சட்டம் ஆகியவற்றில் ஏதேனும் பட்டம் பெற்று தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும் பத்திரிக்கையில் செய்தி வெளியிடும் நாளில், விண்ணப்பதாரர்கள் 35 வயதுக்கு குறையாதவராகவும் 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பபடிவத்தை திருநெல்வேலி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது துறை சார்ந்த இணையதள முகவரியிலிருந்து (https://dsdcpimms.tn.gov.in) மற்றும் மாவட்ட இணையதள முகவரி https://tirunelveli.nic.in/ விண்ணப்பதாரர் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில் 15.09.2025 (திங்கள் கிழமை) மாலை 05.00 மணிக்குள் கீழ்க்கண்டமுகவரியில், கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.

இயக்குநர்,
குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை,
எண். 300. புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை – 600 010.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமனம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது.

மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி